[29th January 1972

மத்திய லளித கலா அகாடமி ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லியிருக்கிறது. இதற்காக இங்கே ஒரு ஏக்கர் நிலம் கேட்டு, அதையும் வழங்க அரசு முன்வந்திருக்கிறது. அப்படிப்பட்ட அக்காடமி போன்ற அமைப்பு உருவாக வேண்டும் என்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. எம். ஆறுமுகசாமி: தலைவரவர்களே, இந்த அகாடமி என்ன பணியைச் செய்து வருகிறது, இது எந்தப் பொருளாதாரத்தைக் கொண்டு இயங்குகிறது, என்ன செய்வதற்கு இதைப் புதுப்பிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சாகித்ய அகாடமியைப் போன்றது தான் இந்த அகாடமியும். சாகித்ய அகாடமி இலக்கியங்களைப் பற்றியது; இந்த லளித கலா அகாடமி என்பது ஃபைன் ஆர்ட்ஸ் என்ற கவின் கலைகளைப் பற்றியது. இதன் பெயரைக் கூட 'கவின் கலைக் கழகம்' என்று மாற்றியமைக்கலாம் என்ற எண்ணம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக்காட்டியதைப்போல், இது பலருக்குப் புரியாமல் இருக்கிறது. ஆதலால் கவின் கலைக் கழகம் என்று வைத்து, சிற்பம், ஓவியம் ஆகியவற்றில் வல்லுநர்களை ஊக்குவிக்கவும் அவர்களுடைய சிறந்த படங்கள் படைப்புக்களுக்குப் பரிசு வழங்கவுமான பணிகளை ஏற்கும். ஓவியம், சிற்பம் போன்ற கலைகளுக்கு நலந்தரும் கருத்துக்களை வகுக்கவும் இந்த அமைப்பு பயன்படும்.

திரு. எஸ். முத்துசாமி: தலைவரவர்களே, இந்த 'லளித கலா அகாடமி'யைத் தமிழ்ப்படுத்தியதுபோல், இதுபோன்று புரியாத சங்கங்களின் பெயர்களையும் தமிழ்ப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அவ்வப்போது எவ்வெவற்றைத் தமிழ்ப்படுத்தி புரியும் அளவில் ஆக்க முடியுமோ, அந்த முறையில் ஆக்கிக்கொண்டு வருகிறோம்.

Attestation from Gazetted Officers

* @ 7 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to **state—**

(a) whether the Government are aware of the difficulties of **candidates seeking admission into Government Educational Institutions in procuring attestation from Gazetted Officers; and**

(*b*) if so, the action taken thereon?

அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகளிடமிருந்து சான்றொப்பம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு கல்வி நிறுவனங்களில் சேர விரும்பும் மாணவர்கள், அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளிடமிருந்து சான்றொப்பம் பெறுவதில் இடர்பாடுகளுக்குட்படுகின்றனரென்பதை அரசு அறியுமா?

@ Postponed from the list of questions for 24th January 1972.

29th January 1972]

(இ) ஆமெனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை. இது குறித்து முறையீடுகள் எதுவும் அரசுக்கு வரவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Photos of candidates seeking admission into the colleges

* @ 8 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that some private colleges insist on photos of candidates seeking admission into their colleges; and

(*b*) if so, whether the same practice will be followed in Government Educational Institutions also ?

தனியார் கல்லூரிகளில் சேர புகைப்படங்கள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தனியார் கல்லூரிகளில் சேர இடம் வேண்டி விண்ணப்பிக்கும் மாணவர்களிடம் அவர்களது புகைப்படங்களைச் சில கல்லூரிகள் கேட்கின்றன என்பதை அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், இத்தகைய நடைமுறை அரசுக் கல்வி நிறுவனங்களிலும் பின்பற்றப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) அரசுக் கல்லூரிகளில் இம்முறையைப் பின்பற்றுவதற்கான செயற் குறிப்பு ஏதுமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, எந்தக் காரணத்துக்காக இந்தப் புகைப்படங்கள் தனியார் கல்லூரியில் கேட்கப்படுகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிய குறிப்பு இல்லை. எந்தக் கல்லூரியில் கேட்கிறார்கள் என்ற குறிப்பு இல்லை. புகைப்படம் கேட்கக் கூடாது என்றும் இல்லை, கேட்கலாம் என்றும் இல்லை. எந்தக் கல்லூரியிலாவது கேட்கிறார்களா என்ற விவரக் குறிப்பு இல்லை. அரசாங்கக் கல்லூரிகளைப் பொறுத்த வரை, புகைப்படம் வேண்டும் என்ற உத்தரவு எதுவுமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, மாணவர்களுக்குப் பதிலாக மற்றவர்கள் பரிட்சை எழுதுகிறார்கள் என்பதற்காகப் புகைப்படங்களைக் கேட்கிறார்கள் என்பதை அரசு அறியுமா ? அப்படி ஆள் மாறாட்டம் ஏதாவது நடந்திருக்கிறதா ?

@ Postponed from the list of questions for 24th January 1972.